# பிபிஆர் – பிரை குடியிருப்புகளில் கைவிடப்பட்டுக்கிடக்கும்

# 1,634 வாகனங்கள்

## மாநகர் மன்றம் நடவடிக்கை எடுக்கும்

கோலாலம்பூர், ஜூலை 28- கூட்டரசுப் பிரதேசம் கோலாலம்பூரில் உள்ள பிபிஆர் எனப்படும் மக்கள் வீடமைப்புக் குடியிருப்புகளிலும் பிரை எனப்படும் மக்கள் வீடமைப்புகளிலும் 1,634 வாகனங்கள் பயன்படுத்தப் படாமல் கைவிடப்பட்டுக் கிடப்பது தெரிய வருகிறது.

இந்த வாகனங்களை அகற்றும் நடவடிக்கைகளில கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஈடுபடவிருப்பதாக பிரதமர் துறை (கூட்டரசுப் பிரதேசம்) அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

குற்றச்செயல்களுக்காக இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

கைவிடப்பட்டுக் கிடக்கும் அந்த வாகனங்களை அப்படியே இழுத்துச் சென்றுவிட முடியாது. இதற்காக சில நடைமுறைகள் இருக்கின்றன. அவற்றைக் கடைப்பிடித்த பிறகுதான் அந்த வாகனங்களை அழிக்க முடியும் என்று அவர் கூறினார்.





ஸ்ரீகோத்தா, கோலாலம்பூரில் உள்ள பொது வீடமைப்புப் பகுதியில் ஒரு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்த பின் அவர்கள் நிருபர்களிடம் பேசினார். பொது வீடமைப்புப் பகுதியிலும் மக்கள் வீடமைப்புப் பகுதியிலும் பராமரிப்புப் பணிகளை மேம்படுத்தவும் அக்குடியிருப்புகளின் தரத்தை உயர்த்தவும் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள 64 பகுதிகளில் குயிக் வின் எனும் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்படுவதாக அவர் கூறினார்.